செ.வெ.எண்: 360 நாள்: 05.06.2020

தஞ்சாவூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம் மற்றும் துணை நீர் மேலாண்மை திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெற தோட்டக்கலை துறைக்கு 34.706 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் 2020-2021ம் நிதி ஆண்டில் பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம் மற்றும் துணை நீர் மேலாண்மை திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

தோட்டக்கலைப்பயிர்களான மா, வாழை, நெல்லி, பலா போன்ற பழப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் மற்றும் இதர பழப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளும், காய்கறி பயிர்களான வெண்டை, கத்தரி, பாகல், பூசணி, மரவள்ளி போன்ற காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளும் மற்றும் இதர காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளும, மலர் பயிர்களான மல்லிகை, ரோஜா, சம்மங்கி பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளும் மற்றும் இதர தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளும் நுண்ணீா பாசனம் அமைத்து இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம்.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும் நுண்ணீர் பாசனம் அமைக்க அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்கள் மூலம் விவசாயிகளின் வயல்களில் அமைத்து தரப்படுகிறது.

பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் தோட்டக்கலை துறைக்கு பொருள் இலக்காக 4165 எக்டரும் நிதி இலக்காக 30 கோடியே 20 இலட்ச ரூபாய் நிதி இலக்காகவும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சொட்டுநீர் பாசன கருவிகள், தெளிப்புநீா பாசன கருவிகள், மழைத்தூவான் போன்ற உபகரணங்கள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு சொட்டுநீரிலும் அதிக மகசூல் மற்றும் வருவாய் என்ற அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதேபோல் துணை நீர் பாசன மேலாண்மை திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட தாலுகா மற்றும் குறு வட்டங்களில் ஆழ்குழாய் அல்லது திறந்த நிலை கிணறுகள் அமைப்பதற்கு ரூ. 25,000/- மானியமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மின்மோட்டர் மற்றும் டீசல் என்ஜின் வாங்குவதற்கு ரூ. 15,000/- மானியமும், பாசன நீர் எடுத்து செல்வதற்கு பிவிசி பைப்புகள் வாங்குவதற்கு ரூ. 10,000/- மானியமும் மற்றும் நீர் சேகரிப்பு அமைப்பு அமைத்துக்கொள்ள அதிகபட்சமாக ரூ. 40,000/- என்ற அளவிலும் மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக 2020-2021ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 4 கோடியே 50 இலட்சத்து 60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறலாம்.

இந்த இரண்டு திட்டங்களிலும் மானியம் பெறுவதற்கு விவசாயிகள் விண்ணப்பங்களுடன் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வயல் வரைபடம், மண் மற்றும் நீர் மாதிரி அறிக்கைகள், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், விவசாயியால் தேர்வு செய்யப்படும் நுண்ணீர் பாசன நிறுவனத்தின் மூலம் உபகரணங்கள் சப்ளை செய்யப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைத்து தரப்படும். இத்திட்டங்கள் குறித்து கூடுதல் விபரங்களுக்கு கீழ்க்கண்ட மாவட்ட மற்றும் வட்டார அலுவலகங்களை அணுகி பயன் பெறலாம்.

| அணுக வேண்டிய அலுவலகம் | தொலைபேசி / அலைபேசி எண் |
|---|---|
| தோட்டக்கலை துணை இயக்குநர்,<br>தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்<br>காந்திஜி சாலை, தஞ்சாவூர்<br>தஞ்சாவூர் மாவட்டம் | 04362 - 271880<br>9443898919 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர் (நடவு பொருள்)<br>தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்<br>காந்திஜி சாலை, தஞ்சாவூர்<br>தஞ்சாவூர் மாவட்டம் | 04362 – 271880<br>9965362562 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர்,<br>தஞ்சாவூர் மற்றும் பூதலூர் வட்டாரம் | 9842184435 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர்,<br>ஒரத்தநாடு மற்றும் திருவோணம் வட்டாரம் | 9488945801 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர்,<br>பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் வட்டாரம் | 9943422198 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர்,<br>பாபநாசம், அம்மாப்பேட்டை மற்றும்<br>திருவையாறு வட்டாரம் | 9940843213 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர்,<br>கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும்<br>திருப்பனந்தாள் வட்டாரம் | 9655577082 |
| தோட்டக்கலை உதவி இயக்குநர்,<br>பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் வட்டாரம் | 9445257303 |

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.